REGD. No. M. 6311

PHONE No.: 55630

தனி இதழ் ஒரு அணா

இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 309

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.M.K

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு ரூ. 24—0—0

6 மாதம் ரூ. 12—0—0

3 மாதம் ரூ. 6—0—0

வெளிநாடு:

ஆண்டு ரூ. 30—0—0

6 மாதம் ரூ. 15—0—0

3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: வைகாசி 28உ வியாழன் (10—6—54) ★ ★ ★ வெளியூர்: வைகாசி 29உ வெள்ளி (11—6—54)

மதுரை சிறையில் 'மாணிக்கவாசகர்!'

—(:)—

தேவாரம் இசைக்கப்பட்டது! திருவாசகம் ஓதப்பட்டது!

—(:)—

ஒவ்வொரு திங்கள் முதல் ஞாயிற்றுக்கிழமையிலும் இக்கூத்து உண்டாம்!

மதங்கலவாத ஆட்சியின் அலங்கோலம்!

மதுரை மத்திய சிறை, 'இந்து' மார்க்க போதனை மடமாகிறது!

சென்ற ஞாயிற்றுக்கிழமை அங்கு, இன்னிசைக் கருவிகளுடன் திருவாசகம் ஓதப்பட்டதாம்; தேவாரப் பண் பாடப்பெற்றதாம்!

இந்த அருஞ்செயல், சாலய்யா ஓதுவார் என்பவரின் இறை வணக்கப் பாட்டுகளால் சிறப்புற்றதாம்!

கூட்டு இறை வணக்கத்தில், 500 கைதிகள் பங்கு கொண்டனராம்!

ஒவ்வொரு திங்கள் முதல் ஞாயிற்றுக்கிழமையிலும், இத்திருக்கூத்து நடைபெற, சிறைச்சாலை அதிகாரிகள் அனுமதித்து உள்ளனராம்!

அதற்காக, அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்துள்ளார், வீர சுப்ரமணியம்!

திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இளையகர்த்தாவான சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் முயற்சியால், திருவருள் தவநெறி மன்றத்தினரால், இக்கூட்டு வழிபாடு நடைபெற்று இருக்கிறது.

சிறைச்சாலை அதிகாரிகள், இறுதியில், வாழ்த்துக் கூறியுள்ளனர்—மேற்குறித்த மடாதிபதிக்கும், மன்றத்திற்கும்!

அடுத்து சிறைச்சாலையில் நடைபெறும் கூட்டு வழிபாட்டில், நாலாயிர திவ்ய பிரபந்தமும், விவிலிய வேதமும், திருக்குறளும், கீதையும், பாராயணம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கலாம்!

சிறைச்சாலை கைதிகளில், திருமங்கை ஆழ்வார்கள் இல்லாமல் இருப்பரோ? அவர்கள், அருள் நெறி பெற, அவர்களுக்கும் வழக்கமான பிரபந்தப் பாசுரங்களைப் பாடச் செய்வதல்லவோ பொருத்தமாக இருக்கும்?

படைக்குப் பரி வாங்கப் பாண்டிய மன்னன் பணம் கொடுக்க, பக்தி மார்க்கம் எனப் பொய் கூறி, கோயில் கட்டிவிட்டு, நம்பிக்கைத் துரோகம், கடமை மறப்புக் குற்றங்கள் செய்த திருவாதவூரார், வழிவந்தவர்களில் சில பலராவது மதுரை சிறையில் கைதிகளாக, இருக்கத்தானே இருப்பர்?

பொறுப்பை மறந்து, மோசடி செய்யத் தூண்டிய 'சிவநெறி', அதே குற்றங்களுக்காக தண்டனை பெற்று, சிறையில் கிடக்கும் கைதிகளுக்கு, எப்படி மனமாற்றத்தையும், நல்வழியையும் காட்டுமோ, நாமறியோம்!

வைகுண்டநாதனின் சேவைக்காக, வழிமறி செய்து 'வைகுண்டம்' சேர்ந்த திருமங்கை மன்னனின் பிரபந்தப் பாசுரம், அவனை ஒத்த மதுரை சிறைப் பறவைகளை எவ்வாறு திருத்தம் செய்யுமோ—திருவருள் தவநெறி திருக்கூட்டத்திற்குத்தான் வெளிச்சம்!

மதம் கலவாத இந்தியச் சுதந்திரக் குடியரசு, என்ன செய்கிறதோ, சர்க்கார் செலவில் நடைபெறும் சிறைச்சாலையில், இத்தகைய மதக் கூத்து நடைபெறுவதற்கு?

தன்தாவதே கைது

காந்தி கொலை வழக்கு எதிரிகளில் ஒருவர்

லைசென்ஸ் இன்றி துப்பாக்கி வைத்திருந்தாராம்!

குவாலியர், ஜூன் 9—

இந்து மகாசபை ஊழியர்களில் ஒருவரான தன்தாவதே என்பவரை லைசென்ஸ் இன்றி துப்பாக்கி வைத்திருந்தார் என்று குவாலியர் போலீசார் கைது செய்தனர்.

இவர் காந்தியார் கொலை வழக்கு எதிரிகளில் ஒருவராவர். ஆரம்பத்தில் மறைந்திருந்த இவர் விசாரணைக்குப் பின்னர், காந்தியார் கொலை வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

இந்தோ-சீன உள்நாட்டுப் போரில் அமெரிக்கா கலக்கும்?

யு. எஸ்.—பிரான்சு இடையே இரகசிய ஒப்பந்தம்?

லண்டன், ஜூன் 9—

இந்தோ-சீனாவில், வியட்மின் சுதந்திரப் படையினரால், சிகப்பு நிதி சமவெளிக்கு ஏற்பட்டுள்ள அபாயம் தீவிரமானால், அமெரிக்க கப்பற்படையும், விமானப் படையும் நேரடியாகப் போரில் தலையிடுவதற்கான, அமெரிக்காவிற்கும்—பிரான்சுக்கும் இடையே இரகசிய ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டு இருப்பதாக, விஷயமறிந்த வட்டாரம் கருதுகிறது.

ஜெனிவாவில் கூடியுள்ள வல்லரசுப் பிரதிநிதிகளின் முடிவை எதிர்பார்க்காமலே, இவ்வொப்பந்தப்படி அமெரிக்கா நடவடிக்கை மேற்கொள்ளும் என நம்பப்படுகிறது.

—

காலவரையறையின்றி இந்தோ—சீனப் போர் நிறுத்தப் பேச்சு வார்த்தைகள் நீடிப்பதை அமெரிக்கா விரும்பாது என்று அமெரிக்க செய்தி ஒன்று கூறுகிறது.

கிழக்கு பாகிஸ்தானில் மீண்டும் ரகளை

துப்பாக்கிப் பிரயோகம்: இரு மாணவிகள் உட்பட 10 பேர் பலியாயினர்!

ஊரடங்குச் சட்டம் அமுல்; 500 பேர் கைது

கல்கத்தா, ஜூன் 9—

கிழக்கு பாகிஸ்தானில் பாரிசால் ஜில்லாவில் பாடெலி கானி என்ற இடத்தில் சென்ற வியாழன் அன்று துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்றதாம்.

இரு முஸ்லிம் மாணவிகள் உட்பட 10 பேர் மாண்டனர், 100 பேர் காயமடைந்தனர் என்று தெரிகிறது.

ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாகவும், அதற்குப் பின் 72 மணி நேரம் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு 500 பேர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிகிறது.

ஐக்கிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரான மஹிபுதீன் அகமதும், பல இந்துக்களும் கைது செய்யப்பட்டார்கள் என்று தெரிகிறது.

★

கவர்னர் அறிவிப்பு

சட்டத்தை மீறி அமைதியைக் குலைக்கும் நபர்களென்ற முறையில் இதுவரை கிழக்கு வங்க சர்க்கார் 706 பேர்களைக் கைது செய்தனர் என்று கி. வங்கக் கவர்னர் மிர்சா தெரிவிக்கிறார். அவர்களில் 160 பேர் கம்யூனிஸ்டுகளாம்.

தனக்கு மட்டும் அதிகாரமிருந்தால் பாகிஸ்தான் முழுமையும் கம்யூனிஸ்ட் கட்சியைத் தடைசெய்வேன் என்று அவர் மேலும் கூறினார். அவருக்கு கம்யூனிசம் முதல் நம்பர் எதிரியாம்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விசேஷ நீதிமன்றம் ஒன்றில் விசாரிக்கப்படுவார்களாம்.

★

ஐ. மு. காரியாலயம்

ஐக்கிய முன்னணிக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தைப் போலீசார் காவல் புரிகின்றனர். சட்டசபை ஐ. மு. காரியாலயத்தை ஆயுதம் தரித்த போலீசார் கைப்பற்றிக் கொண்டனர்.

★

சுபார்கான் கண்டிக்கிறார்

கிழக்கு பாகிஸ்தானில் கவர்னர் ஆட்சி ஏற்படுத்தியதையும் ஹக் மந்திரி சபையை டிஸ்மிஸ் செய்ததும் கண்டிக்கத் தக்கது என்று செஞ்சட்டைத் தலைவர் கான் அப்துல் சுபார்கான் தெரிவித்தார்.

★

தேர்தல் நடத்தக் கோரிக்கை

ஆசாத் பாகிஸ்தான் கட்சியின் இடதுசாரிகள் ஹக் முழுமையும் மக்களைக் கைது செய்யும் சர்க்காரின் போக்கைக் கண்டித்தனர்.

பொது மக்களின் உரிமைகளைக் கடிக்கும் இச்செயல் நாட்டில் வெறுப்புணர்ச்சியை உண்டு பண்ணுமென்றும், பாகிஸ்தானில் மீண்டும் சிறந்த ஆட்சி ஏற்பட பாகிஸ்தானில் மீண்டும் பொதுத் தேர்தல் நடத்த வேண்டுமென்றும் அக்கட்சியின் அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறது.

இந்திக்கு ஒரு தனி யூனியன் அமைச்சராம்!

—(:)—

கல்லூரிகளிலும்—பள்ளிகளிலும் போதனை மொழியாக்க வேண்டுமாம்!

வட்டார மொழியாக உருதுவை ஒப்பக்கூடாதாம்!

டேராடூன், ஜூன் 9—

இரண்டு தினங்களுக்கு முன், இங்கு, உத்திர பிரதேச இந்தி சாகித்திய சம்மேளன மாநாடு நடைபெற்றது. இந்தி மொழியைத் தீவிரமாகப் பரப்புவதற்காக, அதற்கென ஒரு தனி அமைச்சரை யூனியன் சர்க்காரில் நியமிக்க வேண்டும் என்று மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

உருதுவை வட்டார மொழியாக உத்திர பிரதேச சர்க்கார் ஒப்புக்கொள்ளக் கூடாது எனவும் மாநாடு கேட்டுக் கொண்டு இருக்கிறது.

அபுல்கலாம் ஆசாத் தலைமையில் இயங்கிவரும் யூனியன் சர்க்கார் கல்வித் துறை, இந்தி எதிர்ப்புக் கோட்பாட்டைக் கொண்டுள்ளது என, மாநாட்டைத் துவக்கி வைத்த ராஜன் சக்சேனா குறைபட்டார்.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இந்தியைப் போதனை மொழியாக உடனடியாகப் புகுத்த வேண்டுமென, புருஷோத்தமதாஸ் டாண்டன் குறிப்பிட்டார்.

உருதுவை, வட்டார மொழியாக ஒப்ப வேண்டுவோர், வெறும் வகுப்புவாதிகள் என பிருந்தாவன்லால் வர்மா விளக்கம் தந்தார்.

பஞ்சாபி மொழி மாநிலம் உருவாக்க!

மீண்டும் கிளர்ச்சி செய்ய அகாலிதள முடிவு

ஜலந்தர், ஜூன் 9—

பஞ்சாபி மொழி மாநில அமைப்புக் கோரிக்கையை வலியுறுத்த மீண்டும் கிளர்ச்சி செய்வதென சிரோமணி அகாலிதள கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது.

ஒன்பது மணி நேர தீவிரமான விவாதத்திற்குப் பிறகே இம்முடிவு காணப்பட்டிருக்கிறது.

கிளர்ச்சி முறையும், துவக்க நாளும் பிறகு அறிவிக்கப்படும் எனத் தெரிய வருகிறது.

கூட்டத்தில் பெப்சு முன்னாள் முதல் மந்திரியான கியான்சிங் ராரேவாலாவும் கலந்து கொண்டார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 10-6-54 வியாழன்

வாழ்க! நச்சு நாவர்!!

புதிய கல்வித் திட்டம்—திராவிடப் பெருங்குடி மக்கள் மீது ஆச்சாரியார் ஏவிய நாசம்! கருங்கற் சிலையின் அருள் பற்றியும், ஆற்றல் குறித்தும், பக்தர்கள் கேட்டதெலாம் இல்லையென்று சொல்லாது ஈயும் வள்ளற்றன்மை பற்றியும், பூசாரி கூறுகிறானே, அப்பொய்யுரைகளின் உட்பொருள் எதுவோ, அதே உட்பொருள் கொண்டிருப்பதுதான், புதிய கல்வித் திட்டத்தின் விளைவுகள் குறித்து, ஆச்சாரியார் தந்த—தரும் விளக்கமும்!

கற்சிலைக்கு உள்ளதாக அர்ச்சகன் கூறுவது, வெறும் கற்பனை—விதண்டாவாதம்—பாமரரை மயக்கிப் பணம் பறிக்கும் தந்திரம்—என்பது தன்மை நவிர்ச்சியாகும் என்பதை, பூசாரி பரம்பரையினர் கூட மறுக்கார். உண்மை, உள்ளங்கை நெல்லிக்கனியாக இருக்க, பூசாரியின் பித்தலாட்டப் பேச்சை நம்பும் மக்கள் உள்ளனர்—அந்த எத்தரின் ஏவல்படி இப்பொழுதும் ஆடவும் செய்கின்றனர்.

புதிய கல்வித் திட்டத்தில் ஏதேதோ நல்லன பல புதைந்து கிடப்பதாக, அன்பர் ஆச்சாரியார் அலங்காரமாகப் பேசினாரே, இன்றும் பேசக் கிளம்பி இருக்கிறாரே, அந்தப் பேச்சில், ஆராய்ந்து பார்க்க வேண்டிய பக்குவமுடையது ஒன்றுமே கிடையாது. மணற் சோற்றில் கல் தேடும் வீண் வேலையேயாகும்!

அந்தத் திட்டத்தின் அந்தரங்கத்தை, பொதுவாக திராவிட இயக்கமும் குறிப்பாக நமது முன்னேற்றக் கழகமும் அம்பலப்படுத்தின— பட்டிதொட்டிகளில் எல்லாம்! வாய்ப்பும், வசதியும் கிடைத்தபோது, அவைகளை நன்கு பயன்படுத்திக்கொண்டு, திட்டத்தின் கேடுகளை, நாட்டு மக்களுக்கும் பிட்டுப் பிட்டுக் காண்பித்தனர்—நமது கழக முன்னணி வீரர்கள்!

திட்டத்திற்கு எதிராக மக்களின் கருத்தைத் திரட்டுவதில், நமது கழகம் ஆற்றிய பணியின் அளவைக் குறைத்து மதிப்பிடுவது கூடாது—நமக்கும் சரி, மாற்றுக் கட்சியினருக்கும் சரி— அப்போக்கு, தன்மை நவிர்ச்சியின் தரத்தை உணர்ந்து கொள்ள உதவவும் உதவாது.

தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி வேண்டுமா வேண்டாமா என்பதிலே, பெரும்பான்மையான நாட்டு மக்களுக்கு, திட்டவட்டமான தீர்மானம் இன்றும் இருப்பதாகச் சொல்வதற்கில்லை. கல்வியின் இன்றியமையாமை குறித்தே ஒரு முடிவு பெற்றிராத மக்கள், 'இந்த வகையான கல்வி முறைதான் வேண்டும்; அந்தக் கல்வி முறை கோளாறுகொண்டது' எனத் தாமே முன்வந்து, நல்ல தீர்ப்பு வழங்குவர் என எவரும் எதிர்பார்க்க முடியாது.

எனவே, மக்கள் நல்வாழ்வை குறியாகக் கொண்டு, பிறர் நலம் தேடும் சேவா உணர்ச்சியால் உந்தப்பட்டு, பொது வாழ்வில் புகுந்துள்ளோர், கல்வித்துறை பற்றி மட்டுமல்ல—வேறு வாழ்க்கைத் துறைகளில் புகுத்தப்படும் மாற்றங்கள் ஒவ்வொன்று பற்றியும் ஆராயவும், அவைகளின் பலாபலன்கள் பற்றி பொது மக்களுக்கு எடுத்துக் கூறவும், நல்லனவற்றிற்கு மக்களின் ஆதரவு திரட்டவும், தீயனவற்றிற்கு எதிராக மக்களின் எதிர்ப்பை உருவாக்கவும் முன்வருகின்றனர் — விடா முயற்சியுடன், வெற்றி காணும் வரை சேவை செய்கின்றனர்!

தனி நபர்களாயினும் சரி, பலத் தனி நபர்கள் கூடிய ஒரு கட்சி—கழகம்—சங்கம் என்ற முறையில், பொதுச் சேவையில் ஈடுபடுவதாயினும் சரி, எல்லாவற்றிற்கும், மேலே எடுத்துக் காட்டியுள்ளது, பொது விதியாகும்.

குறிப்பிட்ட ஒரு விஷயத்தில் தனிப்பட்ட பலர் கொண்டிருக்கும் கருத்து, ஒருங்கு சேர்ந்து, பெரும்பான்மையான மக்களின் பொது கொள்கையாக—கோட்பாடாக உருவெடுக்கிறது. நறுமணம் வீசும் அழகிய மலர் பல சேர்ந்து ஆரமாவதற்கு, காய்ந்த வாழை நார் அருந்துணை புரிவது போன்றுதான், சிதறிக் கிடக்கும் சிலபல மக்களின் ஒரே நோக்கு ஒன்றாக இணைந்து ஆற்றல் மிகுந்த உருவாக மாறுவதற்குக், கட்சிகள் பெருந்துணை புரிகின்றன.

எனவே, பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறுவது போன்றே, மக்களின் நலன்களை பிரதிபலிப்பதால், கட்சிகளும் சிறப்படைகின்றன— அவைகளின் தேவையும் இன்றியமையாததாகிறது.

இந்தத் தொடர்புதான், நாட்டு மக்களுக்கும் அரசியல் கட்சிகள் பலவற்றிற்கும் உள்ள உறவின் சூட்சுமமாகும். இந்த உண்மையை மறப்பவர்கள், உலக வரலாற்றையே மறப்பவர்களாவர்.

வைதிகக் கருத்துக்களை வரவேற்கும் சங்கர பீடமும், மக்கள் தொகையின் ஒரு சிறு பகுதி மக்களின், உள்ளக் கருத்தைப் பிரதிபலித்துக்கொண்டுதான் இருக்கிறது. நாடாளும் காங்கிரஸ் கட்சியும், நாட்டு மக்களில் ஒரு சாராரின் அபிலாஷைகளை இப்பொழுதும் எதிரொலித்துக் கொண்டிருப்பதை எவரும் ஒப்பியே ஆக வேண்டும்.

மக்கள் வாழ்க்கைத் துறை ஒவ்வொன்றிலும், ஈடுபட்டு உழைத்து வரும் கட்சிகள்— அதன் பெயர் எதுவாக இருந்த போதிலும்—அவைகளுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு, மேற்குறிப்பிட்டுள்ள உறவு முறையில் அமைந்துள்ளதேயாகும்.

ஒரே துறையில் பணி புரியும் கட்சிகளுக்குள், கோட்பாட்டில் மாறுபாடும் வேறுபாடும் இருக்கலாம்; இருக்கத்தான் இருக்கும். கொண்ட கொள்கையில் வேற்றுமை—பேதம்—இருக்கின்றன என்பதற்காக, எண்ணிக்கையில் கூடுதலாகவோ குறைவாகவோ, அவைகளுக்குள்ள மக்களின் தொடர்பை, கிடையாது எனக் கூறுவது பொருந்தாது—அனுபவமும் அதை ஏற்றுக் கொள்ளாது. கிடக்க,

அன்பர் ஆச்சாரியாரின் நச்சுத் திட்டமான புதிய கல்வித் திட்டத்தை, நமது முன்னேற்றக் கழகம் மிக மிகத் தீவிரமாக எதிர்த்தது. திராவிடர்களிடை, பெரியதொரு எதிர்ப்புப் படையை, திட்டத்திற்கு விரோதமாக உருவாக்கியது.

திட்டம் எப்படிப்பட்டதாக இருந்தால் நமக்கென்ன என அறிந்தோ அறியாமலோ கல்வித் திட்டத்தைக் குறித்து அலட்சியமாக இருந்தவர்கள் கூட, நமது கழகத்தின் எதிர்ப்பிரசாரத்தால்—நாட்டில் உருவான சூழ்நிலையால், திட்டத்திற்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட முன்வந்தனர். நமது கழகத்தின் பணி, அத்தகு மனமாற்றத்தை, காங்கிரஸ் கட்சியினருக்குள்ளும் வலுக்கட்டாயமாகத் திணித்தது.

புதிய கல்வித் திட்டத்திற்கு எதிர்ப்பு. காங்கிரஸ் மூகாமிற்குள்ளாகவும் உருப்பெற்று—நாளாக நாளாக விரிவும் வன்மையையும் அடைந்தது.

நாட்டிலே நமது தீவிரமான எதிர்ப்பு—காங்கிரஸ் கோட்டைக்குள்ளே, திட்டத்திற்கு, காங்கிரஸ் கட்சியினரின் மறுப்பு!

திட்டத்தை எதிர்த்த மற்றவர்போல் பேச்சளவில் திருப்தி கொண்டு விடாமல், நமது கழகம், அறப்போர் தொடுக்க முன்வந்தது. இத்துறையில் நமது கழகப் பணியாளர் ஐந்நூறு பேருக்குக் குறைபாதவர்களை, ஆச்சாரியார் ஆட்சி இருட்சிறையில் தள்ளி மூடியது. தடியடி, கண்ணீர்ப் புகை, குண்டடி போன்ற சர்க்கார் தந்த பரிசுகளை, புன்முறுவலோடு பெற்றுக் கொண்டனர் நமது கழக வீரர்கள்.

முடிவில் திட்டம் தோற்றது! புதிய வெள்ளம் பழைய வெள்ளத்தையும், அடித்துப் போன கதைபோல, ஆச்சாரியார் நச்சுத் திட்டம் நாசமானதோடு, அவருடைய ஆணவ ஆட்சிக்கும் நாசம் தேடிவிட்டது. நண்டு, சிப்பி, கதலி நாசமுறும் இயல்பு போல், தாம் பெற்றெடுத்த திட்டத்தால் ஆச்சாரியாரும் அரசியல் அஸ்தமனம் பெற்றார்!

நமது கழகத்தின் பிரசாரம் வென்றதற்கு, நமது அறப்போர் வெற்றி கண்டதற்கு, நமது கழகம், விழா கொண்டாடக்கூடாதாம்; அப்படிக் கொண்டாடுவது உண்மைக்கு மாறுபட்டதாக உள்ளதாம்! இப்படி சிலர், சில நாட்களாக, முணுமுணுத்து வருகின்றனர்!

மக்கள் பெற்ற வெற்றியாம் அது! அதை நமது கழகம் ஏதோ சொந்தம் பாராட்டி, கூத்தாடுகிறதாம்! இது கூடாதாம்; குணமிழந்தோர், நல்ல மனமிழந்தோர் குறைபடுகின்றனர், இவ்வாறு!

திராவிட மக்களின் பெரும் பகுதியினர் கருத்தை நமது கழகம் பிரதிபலிக்கிறது!

எனவே, நாம் கொண்டாடுகிறோம், கிடைத்த வெற்றியை, நமது கழகத்துக்குக் கிடைத்த வெற்றி என!

திட்டத்திற்கு எதிராக மக்களின் கருத்தை உருவாக்கிய கழகம், கருத்துக்கு வெற்றி கிட்டியகாலை — மகிழக் கூடாது!

திட்டத்திற்கு எதிராக அறப்போர் நடத்தி, வெஞ்சிறையில் வாடிய கழகம், அறப்போர் வென்றது கேட்டு—இறும்பூதெய்தக் கூடாது!

தடியடிபட்டு குருதியை மண்ணுடன் குழைத்த கழகம், தடியடிபட்டதின் காரணம் கைகூடினது கண்டு,—வெற்றி விழா கொண்டாடக் கூடாது!

காதை, கால்களை, மண்டையை நொறுக்கிக் கொண்ட கழகம், தியாகம் பயனடைந்தது பார்த்து, பூரிப்படையக் கூடாது!

இப்படிப் பேசுகின்றனர், சில அரசியல் நச்சு நாவினர்!

பருவத்தில் நிலத்தைப் பண்படுத்தி, பயிர் செய்து, காலம் வந்தபொழுது செந்நெல் கதிர்களை அறுவடை செய்கிறானே, அவன், அப்பொழுது, பூரிக்கத்தானே செய்வான்? ஆனால் பருவத்தில் சோம்பேறியாக இருந்துவிட்டு, வேறு பயிர் களைகளைக் குறித்தும் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்துவிட்டு அறுவடை காலத்தில், அரிவாளும் கையுமாக, கரம்பு நிலத்தில் கால் வைக்கும் வீணன், பாடுபட்டவன் பலனை அனுபவித்து அகமகிழ்வது கண்டால், கோபிக்கத்தானே செய்வான்? கோமாளித்தனமாக கூச்சலிட்டுத்தானே முனைவான்?

ஐயோ, பாவம்! நாம், திட்டத்தை காலா காலத்தில் எதிர்த்து, அறப்போரில் ஈடுபட்டு, அடக்குமுறை உண்டாக்கிய புண்களை பூரிப்புடன் நமது உடலில் தாங்கிக்கொண்டோம். திட்டம் தோற்று, வெற்றி நம்மை நாடி வந்த போது, மகிழ்கிறோம்—விழா கொண்டாடுகிறோம்!

இந்தப் பேறு கிட்டப் பெறாத மற்றவர், வேதனைப்படுகின்றனர் — வெட்கப்படுகின்றனர்! துக்கப்படுகின்றனர்—துன்பப்படுகின்றனர் — அடிதுடிக்கின்றனர்!

எரிச்சல் — ஏமாற்றம் — அழுக்காறு—அவர்கள் உள்ளத்தில் குடிபுகுந்துவிடுகின்றன!

இவ்வெற்றியை மக்கள் கொண்டாட வேண்டும்!

நமது கழகம் கொண்டாடுவது முறையல்ல—என 'நியாயத்தை' விலை கூறி விற்கின்றனர்!

மன நிம்மதி பெற—கறைபட்ட தங்கள் முகத்தை மக்கள்முன் காட்ட மார்க்கம் தேடுகின்றனர் — அந் நச்சு நாவினர்!

அவர்கள் செயல் கண்டு இரங்குவோம்; அவர்கள் பால் அனுதாபம் காட்டுவோம்; இதுதான் அறிவுடைமை! தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை உணராமலே, எரிச்சலின், தங்கள் ஆதிக்கம் சரிகிறதே என்ற ஆத்திரத்தில், அறிவிழந்து பேசுகிறார்கள்— இல்லை—ஏசுகிறார்கள், நம்மை!

வெற்றிக் களிப்பிலே நாம் உலாவும்போது, தோல்வி துளைத்த இருதயத்தோடு இருப்போர், தங்கள் உள்ளத்திற்குச் சமாதானம் தேடிக்கொள்வதற்காகவாவது, நம்மை வசை பாடத்தானே செய்வர்? அந்த இழி செயலில், அவர்களுக்கு ஆறுதலும் இன்பமும் கிடைப்பதாக இருந்தால், அதை ஏன், நாமும் அவர்கள் மீது கடுஞ்சொல் வீசி, அவைகளை, அவர்கள் பெறுவதிலிருந்து தடுத்து விட வேண்டும்? நமது எதிர்ப்பாளர்களுக்கும் மன நிம்மதியும், பூரிப்பும் ஏற்படும் வகையில் நாம வெற்றி விழா கொண்டாடுகிறோமே, என்று பெருமிதம் கொள்வதல்லவா, நமது பெருமையாக இருக்க வேண்டும்? வாழ்க, நச்சு நாவர் என்றல்லவா நாம் வாழ்த்த வேண்டும்!

சாலை அபிவிருத்திக்கு ரூபாய் 128 கோடி

ஐந்து ஆண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாம்!

பெங்களூர், ஜூன் 4—

5 ஆண்டுத் திட்டப்படி சாலை அபிவிருத்திக்காக 128 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் இதில் 27 கோடி ரூபாய் 2-ம் சாலைகள் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு யூனியன் ரயில்வே உதவி மந்திரி ஓ. வி. அளகேசன் இங்கு நடைபெற்ற பிரதம இஞ்சினியர்கள் மகாநாட்டில் பேசுகையில் கூறினார். அவர் மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது.

சில தேர்ந்தெடுக்கப் பட்ட சாலை அபிவிருத்திக்காக ரூ 4.24 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதென்றும், மீதித் தொகை மற்ற மாநில சாலைகள் அபிவிருத்திக்கு செலவிடப் படும் என்றும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக நாடு முழுவதும் சேர்க்கையாக இணைக்கப்பட்ட சாலைகளை அமைப்பதே சர்க்காரின் குறிக்கோள் என்று கூறினார்.

கோலாரை தமிழகத்துடன் இணைக்க

காங்கிரஸ் தீர்மானம் தயாரிக்கிறது

பங்காருப்பேட்டை, ஜூன் 7—

கோலார் தங்க வயல் பகுதி தமிழ் நாட்டுடன் சேர விரும்புகிறது. இது சம்பந்தமான ஒரு உத்தியோக பூர்வமான தீர்மானத்தைத் தயாரிக்கும்படி தாலுகா காங்கிரஸ் கமிட்டி அதன் நிர்வாகஸ்தர்களுக்கு ஒரு அறிக்கை விடுத்திருப்பதாகத் தெரிகிறது.

கடந்த சனியன்று நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டியில் இது சம்பந்தமாக வந்த இரு உத்தியோக பூர்வமற்ற தீர்மானங்களின் மீது மேற்படி கமிட்டி தீவிர விவாதம் செய்த பின்னரே இம்முடிவு செய்யப் பட்டது.

மைசூர் அரசருக்கு வரவேற்பளிக்க......

பெல்லாரி நகரசபை மறுப்பு

பெல்லாரி, ஜூன் 8—

இம்மாதம் 30-ந் தேதியிலிருந்து 3 நாட்களுக்கு சுற்றுப் பயணம் செய்ய இருக்கும் மைசூர் ராஜ பிரமுகருக்கு பெல்லாரி நகரசபை வரவேற்பளிக்க மறுத்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

மைசூருடன் இணைக்கும் யோசனை வெளியான நாள் முதல் பிரமுகர்கள் யாருக்கும் வரவேற்பளிப்பதில்லை என்ற முன்னமேயே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாம். தனிப்பட்ட முறையில் மகாராஜாவின் நகர சபைக்கு விஜயம் செய்வது விரோதமும் இல்லை என்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திராவிட இன மொழியினர் உட்பகையைத் தவிர்க்க!

மொழி அடிப்படையில் தமிழ் மாநிலம் வேண்டும்!

தோழர் ஜீவானந்தம் பேச்சு

7—6—54 அன்று, சென்னை, ஆள்வார்பேட்டையில் நடைபெற்ற மக்கள் முன்னேற்ற மன்றத்தின் 2-ம் ஆண்டு விழாவில் தோழர் ப. ஜீவானந்தம் பேசியதன் சுருக்கம் கீழே தரப்படுகிறது :—

“மக்கள் முன்னேற்ற மன்றத்தின் 2-ம் ஆண்டு விழாவில் காங்கிரசில் ஊறிப்போன டாக்டர் நாயுடுவும், கம்யூனிஸ்டு கட்சியில் ஊறிப்போன நானும், திராவிடர் இயக்கத்தில் ஊறிப்போன தோழர் அண்ணாதுரையும் ஒன்றாகக் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்வு கொள்கிறேன்; இப்படி ஒற்றுமையுடன் கூடியிருக்கிறோம், இந்த மன்றம், இந்த வட்டத்திலே உயிரோடு இயங்கி வருவதற்கு அனுகூலமாயிருக்கும் பொருட்டு, பொதுவாக எல்லோரும் ஒத்துக்கொள்கிற பிரச்னைகள் குறித்து மட்டும் பேசவேண்டும் என்று விரும்புகிறேன் (கூட்டத்தில், ‘அண்ணாவுக்கு அரசியல் நாகரிகம் தெரியும். நீங்கள் கற்றுத் தர வேண்டாம்,’ என்ற பேரொலி எழும்பியது)

தோழர் அண்ணாதுரைக்கு அரசியல் நாகரிகம் தெரியாதென்று அல்ல—இதை நான் குறிப்பிட்டது—என் நிலையை தெளிவுபடுத்திவிட ஆசைப்படுகிறேன்—டாக்டர் நாயுடுவுக்குக் காங்கிரஸ் கொள்கையில் பிடிப்பும், எனக்கு கம்யூனிசக் கொள்கையில் பிடிப்பும், தோழர் அண்ணாதுரைக்கு தி. மு. கழகக் கொள்கையில் பிடிப்பும் இருப்பது நியாயமே; அப்படிப்பட்டவர்கள் ஒற்றுமையாக ஒரு மன்றத்தின் மேடையிலே நிற்கும் போது—நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டமாதிரி — மன்றம் உயிரோடு உலவ, நாம் பொதுப்படையான கருத்துக்களை மட்டும் பேசுவதின் மூலம் அனுகூலமாயிருக்க வேண்டும்—என்று மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த மன்றத்தின் ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டார்கள்—சிறுவர்களுக்கு இரவுப் பள்ளியும், முதியோர் கல்வி வகுப்பும் நடத்துவதாக—முதியோர் கல்வி எவ்வளவு அவசியமானதென்று சொல்லத் தேவையில்லை.

இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் நாட்டின் மீது அன்பும், மொழியின் மீது பற்றும், நாட்டு வளங்களைப்பற்றிய அறிவும் உள்ளவர்களாக இருக்க வேண்டுவது அவசியம் இது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை.

நமது நாட்டு வளங்கள் என்ன கொஞ்சமா? கடல் வளம், பொருள் வளம், நீர் வளம், நில வளம், மக்கள் வளம் இவை எல்லாம் மிக்கதல்லவா?

நமது மொழி—தாய்மொழி—தமிழ் மொழி, இலக்கண வளங்களையுடைய ஒரு மிகப் பெருந் தொன்மையுடையதல்லவா? நமது நாட்டு மக்கள்—‘நமது தாய்மொழிதான் எவற்றிலும் முதலிடம் பெறவேண்டும்; அந்தத் தாய்மொழிக்குப் பிறகுதான், இரண்டாவதாகத் தான் வேறெந்த மொழியும் இருக்க வேண்டும்—என்னும் உணர்வும், பற்றும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். அந்த உணர்வை, இந்தப் பேட்டை மக்கள் பெற இந்த மன்றம் பயன்படவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, அந்தத் தாய் மொழி ஆட்சி மொழியாக வேண்டுமென்று சொல்வதிலே இரண்டு கருத்து இருக்க நியாயமில்லை; தாய்மொழி ஆட்சி மொழியாக இருந்தால்தான், நாட்டு மக்கள் அந்த நாட்டின் நடவடிக்கைகள் அத்தனையிலும் பங்கு பெற முடியும், சட்டசபையிலும் சரி, அரசாங்க அலுவல்களிலும் சரி, மக்களின் எண்ணங்கள் பிரதிபலிக்க, அரசாங்க நடவடிக்கைகளை நாட்டு மக்கள் எல்லோரும் கூர்ந்து கவனித்து ஊடுருவிப் பார்க்க இயலும்.

அடுத்ததாக, அந்தத் தாய் மொழியை அடிப்படையாகக் கொண்ட ராஜ்யம் அமைக்கப்பட வேண்டும்.

“இப்போது நமது தாயகம் தமிழகம் துண்டுபட்டுக் கிடக்கிறது திரு - கொச்சியுடன் ஒரு பகுதியும், புதிய ஆந்திரத்துடன் ஒரு பகுதியும், பிரெஞ்சிந்தியாவில் ஒரு பகுதியுமாகப் பிரிந்து கிடக்கிறது இதனால், தமிழ் மக்கள் ஆந்திரர்களுடனும் கன்னடியர்களுடனும், மலையாளிகளுடனும் மோதிக்கொள்கிற நிலை ஏற்படுகிறது இது தவிர்க்கப் படுவதற்கு தமிழ் பேசும் பகுதிகள் எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்ட தமிழ் ராஜ்யம் அமைக்கப்பட வேண்டும்.”

பிரெஞ்சிந்தியாவில் இவ்வேளை சுதந்திரக் கிளர்ச்சி நடைபெறுகிறது, அந்தக் கிளர்ச்சியும் வெற்றிபெற்று பிரெஞ்சு ஏகாதிபத்தியம் வெளியேற வேண்டுமென்பதிலும் யாருக்கும் இரண்டு கருத்து இருக்க முடியாது. அந்தக் கிளர்ச்சிக்கு நாம் ஆதரவு தரவேண்டும் பிரெஞ்சு ஏகாதிபத்தியம் சிறியதாக இருந்தபோதிலும், பெரியதொரு நாடான இந்தியாவைச் சவாலுக்கு அழைப்பது போன்று பேசிவருகிறது.

அந்த நிலையில், நாம் எல்லோரும், பிரெஞ்சுப் பகுதிகள் எல்லாம் தமிழ் நாட்டுடன் சேரவேண்டியவை என்கிற காரணத்தால்; ஒன்றுபட்டு, நிர்ப்பந்தித்து பண்டித நேருவை தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மொழி வழியில் சம்யுக்த கூர்ஜரம்

குஜராத் காங்கிரஸ் குழுவின் கோரிக்கை

மற்ற அரசியல் கட்சிகளும் ஆதரிக்கின்றன

அகமதாபாத், ஜூன் 8—

மாநில திருத்தக் குழுவிற்கு, குஜராத் மொழி அடிப்படையில் சம்யுக்த கூர்ஜரமே, தங்கள் கோரிக்கை என, அங்குள்ள பல்வேறுபட்ட அரசியல் சமூகப் பொது நிலையங்கள் கோரிக்கை கொடுத்துள்ளன

மொழி வழியில் அமைக்க நினைக்கும் சம்யுக்த கூர்ஜரம் 71,000 சதுர மைல் நிலப்பரப்பு கொண்டிருக்குமெனவும், ஏறத்தாழ 1 70 00,000 குஜராத் மொழி பேசும் மக்களைக்கொண்ட ஒரு ஆட்சி ஏற்பாட்டிற்கு உட்பட்டதாக இருக்குமெனவும் அறிவிக்கப்படுகிறது.

மே 26-ல் கூடிய குஜராத் பிரதேச காங்கிரஸ் குழு, அதனால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழு உருவாக்கிய மாநில அமைப்புக் கோரிக்கையை, குறிப்பிடத் தகுந்த திருத்தங்கள் எதுவும் செய்யாமல், ஒரு மனதாக ஒப்புக்கொண்டது.

வேறு பல நிலைகளைக் கருதி, இப்பொழுது உள்ள பம்பாய் மாநிலத்தைத் துண்டிக்கக் கூடாது என, மாநில திருத்தக் குழு முடிவிற்குவருமானால், அத்துடன் ஒன்று பட்டு இருப்பதில் குஜராத் மக்களுக்கு ஆட்சேபனை கிடையாது எனவும், ஒரு வேளை பம்பாயைப் பிரிக்க திருத்தக் குழு முனையுமானால், பம்பாய், சௌராஷ்டிரம், கச், அபு, டாங்கள், கந்தர்பார், உமர்கூர் முதலிய குஜராத் மொழி பேசுவோர் பெரும்பான்மையினராக உள்ள பகுதிகளை ஒன்று சேர்த்து, சம்யுக்த கூர்ஜரமாக ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும், பிரதேச காங்கிரஸ் கோரிக்கையில் குறிக்கப்பட்டிருக்கிறது.

மொழிவழியில் திருத்தங்கள் செய்யப்படுமானால், பம்பாய் நகரை ஒரு தனி ஆட்சி ஏற்பாடாக ஆக்க வேண்டுமெனவும், அக்காங்கிரஸ் குழு சிபார்சு செய்திருக்கிறது.

காங்கிரசின் இக்கோரிக்கையை, அடிப்படை கருத்து வேற்றுமை எதுவுமில்லாமல், சொல் மாற்றத்துடன், அங்குள்ள பொது நிலையங்கள் அனைத்தும் ஒருமனதாக ஆதரிக்கின்றன.

‘குஜராத் தரிசனம்’ என்று வெளியிடப்பட்டுள்ள நூலில் சம்யுக்த கூர்ஜரம் பற்றிய புள்ளி விவரங்கள் தரப்பட்டுள்ளன.

சம்யுக்த கூர்ஜரத்தில் 8 லட்சம் ‘தீண்டப்படாத’ மக்களும், 19 லட்சம் ஆதிவாசிகளும் இருப்பர். 900 - மைல் நீளமுள்ள கடற்கரை உள்ளது. 3 200 மைல் நீளத்திற்குப் புகை வண்டி பாதை இருந்து வருகிறது. பயிர் செய்யப்படும் நிலம் 2 கோடி ஏகர் விஸ்தீரணத்திற்கும், இனி பயிர் செய்வதற்குத் தகுதியான நிலையில் 1½ கோடி ஏகர் விஸ்தீரணமுள்ள நிலம் பரும் இருப்பதாக அந்நாலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சிவகெங்கை மஜீத் நினைவுப் படிப்பகம்

30—5—54ல் மஜீத் நினைவுப் படிப்பகத்தின் செயற்குழு கூட்டம் தோழர் கு. சுப்ரமணியன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் கு. சுப்ரமணியன் செயலாளராகவும், கோ. மணவாளன் துணைச் செயலாளராகவும், சி. மூக்தாபா பொருளாளராகவும், வே முத்தையா, எம். மஜீக், எம் உசேன், க. ராமசாமி, ச. பெரியசாமி, சா. சுப்பையா. அ. பெரியசாமி, த. ராமசாமி, க மணியன், அ. வெங்குடுசாமி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருவள்ளுவர் முன்னணி கழகம்

சென்னை, ஜூன் 9—

5—6—54 மாலை காசிவிஸ்வநாதர் கோவில் திடலில், கழகச் சார்பில், தோழர் த. கோ. அழகன்பன் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சி. ஆர். பாலசுந்தரம், கலைச்செழியன், வி. என். பாண்டியன், என். வி. நடராசன் ஆகியோர் முறையே புரட்சி, விஞ்ஞானம், வருங்கால திராவிடம், அறப்போர் வெற்றி ஆகிய பொருள் பற்றி சொற்பொழிவாற்றினர். புதிய கல்வித் திட்ட ஒழிப்புக்கு முன்னின்று போராடியவர்களைப் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நீக்ரோக்களை அனுமதிக்க மறுப்பு

அமெரிக்கக் கல்லூரியின் பிடிவாதம்

மெம்பிஸ் ராஜ்பக் கல்லூரியில் ஐந்து நீக்ரோ மாணவர்களை அனுமதிக்க முடியாது என்று அதன் நிர்வாகி கூறினார்.

கல்லூரியில் சேர அனுமதிக்க வேண்டுமென 200 வெள்ளையர்களுடன் இந்த ஐந்து நீக்ரோ மாணவர்களும் நின்றார்களாம்.

அமெரிக்க உயர்நீதி மன்றம் தன் உத்தரவை எப்படி, எப்போது நிறைவேற்றுவது என்று தீர்மானிக்க வேண்டுமென்றும், ராஜ்ய சர்க்காரிடமிருந்து உத்தரவு வரவேண்டுமென்றும் கல்லூரி ரிஜிஸ்திரார் வி. கிளார்க் கூறினார்.

வ. ஆ. மாவட்ட தி. மு. க. மாநாடுகள்

ஜூன் மாதம் 19, 20-ந் தேதிகளில் வேலூரில்
‘அழகிரி பந்தல்’ முத்து அரங்கில் நடைபெறும்

19—6—54 சனி :	20—6—54 ஞாயிறு,
சமுதாய சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர் : ஈழத்து அடிகள்	தலைவர் : கே. ஏ. மதியழகன்
திறப்பாளர் : இரா. நெடுஞ்செழியன்	திறப்பாளர் : நாஞ்சில் கி. மனோகரன்

இரு நாட்களிலும் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், மு. கருணாநிதி, சி. பி. சிற்றரசு, அ. பொன்னம்பலனார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, க. அன்பழகன், அரங்கண்ணல்; ப. உ. சண்முகம், என். எஸ். இளங்கோ, ஏ. கே. வேலன், தில்லை வில்லாளன், என். வி. நடராசன், கண்ணதாசன், ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., இரே, இளம்வழுதி, எம். எஸ். ராமசாமி, தூத்துக்குடி தோழர்கள் கே. வி. கே. சாமி, இரா. கு. தங்கப்பழம், நடராசன், சிவசாமி, ரத்தினம், நடிகர்கள் எம். ஜி. ராமச்சந்திரன், கே. ஆர். ராமசாமி, தோழியர்கள் சத்தியவாணிமுத்து, அருண்மொழி, பூங்கோதை மற்றும் திராவிட சட்ட சபை எம். எல். ஏ.-க்களும், பல இயக்கத் தோழர்களும் கலந்துகொள்வார்கள்.

இசை முரசு நாகூர் அனிபா குழுவினரின் இசை விருந்து இரு நாட்களிலும் நடைபெறும்

இரு நாட்களிலும் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் நடிக்கும்
‘அம்மையப்பன்,’ ‘சந்திரமோகன்’ நாடகங்கள் நடைபெறும்

—வரவேற்புக் குழுவினர்

தில்லை வள்ளுவர் கழகம்

சிதம்பரம், ஜூன் 7—

30—5—54ல் தோழர் ப. அ. வெங்கடசாமி தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. 27—9—53 முதல் 30—5—54 முடிய வரவு—செலவு ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

உலக அரங்கில்

கொழும்பு :

லீஷிப உதவிக் கழகம் என்ற ஒரு அமைப்பு கொழும்பு வில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது பார்லிமெண்டு மெம்பர்கள், அரசியல் இயக்கத் தலைவர்கள் ஆகியோர் நிறைந்துள்ள இக்கழகம் லீஷிப விடுதலைக்குப் பாடுபடும் என்று தெரிகிறது.

* * *

பிரிட்டிஷ் அரசியின் பிறந்த நாள் பரிசாக இலங்கை—இந்தியா இடையே கடலில் நீந்திய நவரத்னசாமிக்கு 'எம்பயர்' பரிசு அளிக்கப்படும் என்று தெரிகிறது.

★

பாக்தாத் :

இராக் பார்லிமெண்டிற்கான தேர்தல்கள் நடைபெறுகின்றன 100 பிரதிநிதிகளை மக்கள் தேர்ந்தெடுப்பார்கள். சென்ற ஜனவரியில் நடைபெற்ற தேர்தலின்போது இராணுவச் சட்டம் அமுலில் இருந்ததாம்; இப்போது அமைதியாகத் தேர்தல் நடைபெறுகிறது.

★

பாங்காக் :

முன்னாள் தாய்லாந்து அமைச்சர் ஒருவர் உட்பட இருபத்து மூன்று பேர்களை வியட்நாமின் வட கிழக்கு மாகாணமான உபோல்ராஜ் ஹானி என்ற மாகாணத்தில் போலீசார் கைது செய்தனர். தேசத் துரோகம் செய்தார்கள் என்று இவர்கள் மீது குற்றச்சாட்டு.

★

கெய்ரோ :

பிரான்ஸ், சவூதி அரேபியப் பொருளாதார நிபுணர்களுடன் எகிப்திய சர்க்கார், எண்ணெய்க் கப்பல் ஒன்றை சொந்தமாக வாங்க 18,00,000 பவுன் முதலீடுள்ள கம்பெனி ஒன்றை ஏற்படுத்தப் பேச்சுவார்த்தைகள் நடத்துகின்றனர்.

★

லண்டன் :

ஆயுதப் பரிகாரணம் பற்றி வல்லரசுகளிடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகள் அவங்கி நான்கு வாரங்களாகின்றன. அடிப்படைப் பிரச்சினைகளிலேயே வல்லரசுகளிடையே ஒருமைப்பாடு காணப்படவில்லை.

• • •

இங்கிலாந்தில் தொழிற் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவரான ஆர்தர் கிரீன்வுட் என்பவர் தனது 74-வது வயதில் மரணமடைந்தார். அவர் தன் வாழ்நாளில் பிரிட்டனின் முதல் அமைச்சராவார் என்று பலர் எதிர்பார்த்தனர்.

★

நைரோபி :

கெனியா சட்டசபையில் உள்ள ஐரோப்பிய உறுப்பினர்களிடையே உள்ள கழகத்தினைக் கலைத்துவிட்டு, அதிக உரிமைகளை உறுப்பினர்களுக்கு அளிக்கும் வகையில் புதியதோர் கழகம் ஒன்றை ஏற்பாடு செய்கின்றனர்.

★

ஜார்ஜ்டவுன் :

புரட்சி நிலைமையை உண்டாக்க இருப்பதாகவும், அது பற்றிய விசாரணைக்கு ஜூன் 18-ந் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படியும் பிரிட்டிஷ் கயானாவின் மக்கள் முன்னேற்றக் கட்சியினர் பலருக்குப் போலீசார் சம்மன் அனுப்பியிருக்கின்றனர்

★

சியோல் :

தென்கொரிய சட்டசபையில் சிங்மென் ரீயின் கட்சியினர் பெரும்பான்மையான ஸ்தானங்களை கிடைத்திருக்கின்றனர்.

பினாங் :

வடக்கு மலேயா காடுகளில் உள்ள கம்யூனிச பயங்கரவாதிகளைக் கொலை செய்ய அவர்கள் மறைந்திருக்கும் இடங்கள் மீது பிரிட்டிஷ் போர்க் கப்பல் ஒன்று குண்டுகளை வீசி காடுகளையே அழித்தது.

★

பெர்லின் :

சதிக் குற்றம் சாட்டி கிழக்கு ஜெர்மனியின் முன்னாள் வெளிநாட்டமைச்சரான ஹெர் ஜார்ஜ் என்பவர் பதினைந்து ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டார் என்று கிழக்கு ஜெர்மன் ரேடியோ அறிவித்தது.

★

நியூயார்க் :

ஐ. நா. சபையின் செயலாளர் ஹாமர்க் ஜோல்டு, இந்தோ-சீனா பற்றிய ஜினீவா மகாநாடு முறிந்து போனால் மேற்கொண்டு என்ன நடைபெறும் என்று நிச்சயமாகச் சொல்ல மறுத்துவிட்டார். ஐ. நா. சபையின் விசேஷக் கூட்டமொன்று நடைபெறலாம் என்று அவர் சூசகமாகத் தெரிவித்தார்

★

வாஷிங்டன் :

அமெரிக்கா தன் கோதுமையின் விலையை மேலும் குறைப்பதாக இல்லை என்று அமெரிக்க விவசாய இலாகா அறிவித்தது. அமெரிக்கா விலையைக் குறைக்குமென்று கனடாவும், ஆஸ்திரேலியாவும் எதிர்பார்க்கின்றன.

★

ஜோகன்ஸ் பர்க் :

ஆங்கிலோ-அமெரிக்க செம்புச் சுரங்கக் கம்பெனி ஒன்று தொழிலாளர்களுக்கு ஆண்டொன்றுக்கு 78 பவுன் ஒய்வுச் சம்பளம் தருவதென்று முடிவு செய்துள்ளது.

★

மாஸ்கோ :

சோவியத் அரசாங்கம் 16,000 ரூபிள் கடன் ஒன்றை எழுப்பியுள்ளது. இக்கடனுக்கு மூன்று சத வீத வட்டி தரப்படுமென்றும், இருபதாண்டுத் திட்டமொன்றிற்காக சோவியத் அரசாங்கம் இக்கடனை எழுப்புகிறது.

★

பாரிஸ் :

நீண்ட காலம் இந்தோ-சீனப் பேச்சு வார்த்தைகள் நடைபெறுவது பற்றி கவலைப்படாது பொறுமையுடன் இருக்கவேண்டுமென்று பிரெஞ்சு சட்டசபையில் வெளி நாட்டமைச்சர் பிடால்ட் கூறினார்.

★

இஸ்தான்புல் :

பாகிஸ்தான் பிரதம மந்திரி முகமது அலி இஸ்தான்புல் வந்து சேர்ந்தார். அவர் அங்காரா சென்று நான்கு நாட்கள் துருக்கியில் சுற்றுப்பயணம் செய்வார் என்று தெரிகிறது.

★

சாலிஸ்பரி :

தென் ரொடீஷிய ரயில்வே வேலை நிறுத்தக்காரர்களின் தலைவர் நாபர்ட் டைலருக்கு அளிக்கப்பட்ட நாடு கடத்தல் தண்டனையை சாலிஸ்பரி உயர்நீதி மன்றம் ஊர்ஜிதம் செய்தது.

★

லாஸ் ஏஞ்சல்ஸ் :

அமெரிக்காவின் முன்னாள் குடியரசு ஜனாதிபதி பிரசிடென்ட் ஜெனரல் ஐசனோவர் ... முக்கியமானவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் இதன் மூலம் அவர் அமெரிக்க சட்டசபைத் தேர்தலுக்கு கட்சியின் சார்பில் போட்டியிடத் தகுதி பெறுகிறார்.

செய்திக்கதிர்

பயிற்சி நிலையம்

மூன்று சுகாதாரக் கல்வி பயிற்சி நிலையங்களை நடத்துவதற்காக இந்திய சர்க்காரும் அமெரிக்க தொழில் நுணுக்கக் கூட்டுறவு கமிஷனும் ஒப்பந்தம் செய்துகொண்டன. இந்த நிலையங்களில் ஒன்று சென்னைக்கு அருகேயுள்ள பூவிருந்தமல்லியில் ஆரம்பிக்கப்படும்.

★

விவாதம்

சென்னை சர்க்காரின் நிதி நிலை பற்றி மத்திய நிதி அமைச்சர் தேஷ்முக்கை சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சந்தித்துப் பேசினார்.

★

தொழில் ஸ்தாபனம்

இந்த ஆண்டு செப்டம்பரில் அந்நிய நாடுகள் உதவியுடன் தொழில் கார்ப்பரேஷன் ஒன்று இந்தியாவில் நிறுவப்படும். திரு ஏ ராமசாமி முதலியார் தலைமையில் கூடிய கமிட்டி ஒன்று இந்த கார்ப்பரேஷனுக்காக உலக பாங்கியிடம் வாங்கும் கடன் பற்றிய விதிகளைத் தயாரித்தது

★

தடை

பாரமவுண்ட் கம்பெனியாரின் படமான 'ஆ ரோஹெட்' என்ற சினிமாப் படத்தில் பயங்கர நிகழ்ச்சிகள் அதிகமாயிருப்பதால், இப்படத்தை இந்தியாவில் எங்கும் காட்டக்கூடாது என்று இந்திய சர்க்கார் தடை செய்துவிட்டனர்.

★

கூட்டுறவு மாநாடு

சென்னை மாகாண கூட்டுறவாளர் மாநாடு அக்டோபர் முதல் வாரத்தில் வேலூரில் நடைபெறும். மாநாட்டை ஆரம்பித்துவைக்க நேருவை அழைப்பார்கள் என்று தெரிகிறது

★

பட்ஜெட்

அடுத்த ஆண்டு தயாரிக்கப்படும் பட்ஜெட்டானது வரி விதிப்பு விசாரணைக் கமிஷனின் சிபாரிசுப்படி தயாரிக்கப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் தேஷ்முக் சென்னையில் கூறினார்

★

தீ விபத்து

திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூருக்கு அருகே அருர் கிராமத்தில் பெரிய தீ விபத்து ஏற்பட்டு 101 கூரை வீடுகள் எரிந்து விட்டதாகவும், ஐந்து வயது சிறுமியும் வெந்து மாண்டதாகத் தெரிகிறது. தீயணைக்கும் படையினர் 19 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

★

மின்சார ரயில்

கல்கத்தாவுக்கு அருகே உள்ள 66 மைல் தூரமுள்ள பந்தல்—பர்தவான் பிரிவிலும், ஷேவ்ரபுலி—தாரகேஷ்வர் பிரிவான 22 மைல் பாதையையும் மின்சார ரயில் அமைக்க 11 கோடி 84 லட்சம் ரூபாய் செலவுள்ள திட்டமொன்றை மத்திய சர்க்கார் அனுமதித்தனர் என்று தெரிகிறது

★

வர்த்தகம்

1953ம் ஆண்டில் இந்திய சர்க்காரின் வெளிநாட்டு வர்த்தகம் குறைந்துவிட்டதாம்; ஆனால், சீன நாடுகளுடன் ரூ. 7 கோடி 35 லட்சம் சாதக மிச்சம் கிடைத்ததாம்!

★

எண்ணெய்

ஸ்டாண்டர்ட் வாகூவம் கம்பெனியார் பம்பாயில் 50 லட்சம் செலவில் அமைக்கும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஜூலையில் உற்பத்தியைத் துவக்கும் என்று தெரிகிறது.

அழகிரி இலவச பள்ளி நிதிக்காக

13—6—54 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு வண்ணையம்பதி தியாகராயர் கல்லூரியில்

அண்ணா தலைமையிலும், மு கருணாநிதி முன்னிலையிலும்

"அம்மையப்பன்"

(மு. கருணாநிதி 6 மாத சிறை வாழ்வில் தீட்டிய புதிய நாடகம்)

எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினரால் நடிக்கப்படும்

டிக்கெட் : ரூ 1, அணா 8 —24-வது வட்ட தி.மு.க.

கழகக்கூட்டங்கள்

★

காட்டுமன்னார்குடி

சிவன் கோயிலுக்கு எதிரில்

12-6-54 சனி மாலை 5 மணிக்கு

தலைவர் :

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.

பேசுவோர் :

சி. என். அண்ணாதுரை
அ. பொன்னம்பலனார்
இரே. பாலகுருசாமி
பொ. சொக்கலிங்கம்

★

மேட்டுப்பாளையம்

(திருச்சி)

12—6—54 சனி மாலை

பேசுவோர் :

ஈ வெ கி. சம்பத்
எஸ். அப்பாவு

★

மூக்கூடல்

காஞ்சனா டூரிங் டாக்கீசுக்கு வடபக்கமுள்ள திடலில்

13—6—54 இரவு 8 மணிக்கு

தலைவர் :

எஸ். இரத்தினவேல் பாண்டியன்

பேசுவோர் :

இரா நெடுஞ்செழியன்
ஏ. வி பி. ஆசைத்தம்பி

தியாகராயர் பகுத்தறிவு மன்றம்

11—6—54 மாலை 6 மணிக்கு வடசென்னை தியாகராயர் பகுத்தறிவு மன்றச் சார்பில், சொற்பயிற்சிக் கூட்டம் தோழர் நாராயணசாமி தலைமையில் நடைபெறும். 'ஆரியமும் திராவிடமும்' என்னும் பொருள்பற்றி தோழர்கள் தம்பிராசன், மதிவாணன், சிவாஜி, பாலசுப்ரமணியம் ஆகியோர் பேசுவர்.

சென்னை 3-வது வட்ட தி.மு.க. உறுப்பினர்கட்கு

12—6—54 இரவு 7 மணிக்கு சென்னை வண்ணை, மணியக்காரர் சௌஸ்ட்ரி ரோடில் உள்ள கழகக் கட்டிடத்தில், கழகப் பொது உறுப்பினர் கூட்டம் சென்னை மாவட்ட செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெறும். அதுபோது, புதிய நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

திருமணம்

மணமகன் : க. த இராமச்சந்திரன்

மணமகள் : வே மங்கையர்க்கரசி (மறைந்த உடையார்பாளையம் ஆசிரியர் வேலாயுதம் அவர்களின் முதற் செல்வி)

13—6—54 ஞாயிறு காலை 10.30 மணி அளவில், தோழர் கே. ஆர். விசுவநாதம் எம் எல்.ஏ அவர்கள் தலைமையில் கரடிகுளம் (ஜெயங்கொண்டம்) மணமகன் இல்லத்தில் நடைபெறும். பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் டி. பி. வேதாசலம், மு. கருணாநிதி, வி பூவராகசாமி, எம் பி. ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசுவர்.

திண்டிவனத்தில்...

வன்னிய பெருமக்களின் பொதுக்கூட்டம்

13—6—54 மாலை 3.30 மணிக்கு, வன்னியகுல பெருமக்களின் பிரமுகர்கள் கூட்டம் தோழர் வி. கோபால கவுண்டர் இல்லத்தில் நடைபெறும். அதில் பல முக்கிய முடிவுகள் செய்யப்படும், அன்று மாலை 6-15 மணிக்கு திண்டிவனம் புகைவண்டி நிலையத்திற்கருகில், காவேரிப்பாக்கம் பெரியார் திடலில் வன்னியகுல பெருமக்களின் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது 'இக்கால நிலை—எதிர்கால நிலை' என்கின்ற கருத்துக்கள் பற்றி தோழர் வி. கோபால கவுண்டர், எம். எல். ஏ. தலைமையில் தோழர்கள் ஏ கோவிந்தசாமி, எம். எல். ஏ திருக்குறளார் வீ முனுசாமி, எம் பி, மற்றும் பலர் பேசுவார்கள்

பெங்களூர் நகர தி. மு. கழகத் தோழர்கட்கு

'ஜூன் 19, 20-ந் தேதிகளில் வேலூர் மாநாட்டிற்கு பெங்களூரிலிருந்து போக விரும்பும் தோழர்களை, பெங்களூரில் ஓரிடத்தில் கூடி கழகக் கொடிகளுடன் ஊர்வலம் நடத்தி ரயிலடிக்குச் சென்று, பின் ஒதுக்கப்பட்ட பெட்டியில் பெங்களூரிலிருந்து வேலூர் செல்ல போதிய ஏற்பாடுகள் செய்துவருவதால், மாநாட்டிற்குப் போக உத்தேசித்துள்ள தோழர்களனைவரும் அன்புகூர்ந்து ஜூன் 13-ந் தேதிக்குள் எனக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்," என, சீரமபுரம் தி மு. கழகத் துணைச் செயலாளர் அறிவிக்கிறார். முகவரி :— ம. செல்வராசன், 'அன்பு அகம்,' 83, லேபர் காலனி சீராமபுரம், பெங்களூர்-3.

மீ சு இளமுருகு, பொற்செல்வி சுற்றுப்பயணம்

11—6—54: திண்டுக்கல்
13—6—54: கும்பகோணம்
20—6—54: அருப்புக்கோட்டை

தேர்வு எழுதிய 34 மாணவிகள்

அனைவரும் வெற்றியடைந்தனர்

கும்பகோணம், ஜூன் 9— தஞ்சை மாவட்டம் நேட்டாபுச் சாவடியிலுள்ள இ எல் எம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலிருந்து எஸ். எஸ் எல் ஸி, தேர்வுக்குச் சென்ற 34 மாணவிகளும் தேர்வில் வெற்றி பெற்றனர். இந்தப் பள்ளி 98 ஆண்டுகளாகத் தொண்டாற்றி வருகிறது.

இந்த மாதிரி நூற்றுக்கு நூறு பேர் பாஸ் செய்வது இப்பள்ளிக்கு புதிதல்ல.

[illegible] முன்னேற்றக் கழகத் தலைவர் தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் ... அழகிரி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது (26, ... நாராயண செட்டியார் தெரு, ... புரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.